மதுரை வடக்கு மாவட்டம் சோழவந்தான் தொகுதி சார்பாக அலங்காநல்லூரில் நடைபெற்ற தமிழ்நாடு தலைகுனியாது பிரச்சார பயணத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓ.பி.ரவீந்திரநாத், கோபாலகிருஷ்ணன், மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பன், அவைத்தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், தொகுதி பொறுப்பாளர் சுப.த.சம்பத், கழக நிர்வாகிகள் கரு.தியாகராஜன், சேகர், தன்ராஜ், முத்தையன், அருண்குமார், பரந்தாமன், பாலராஜேந்திரன், பசும்பொன்மாறன், பொதும்பு தனசேகர், ரகுபதி, பால்பாண்டியன், மனோகரவேல் பாண்டியன், சத்தியபிரகாஷ், ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், ஜெயராமன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழகத்தினர் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.கழக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் நாடிமுத்து தலைமையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் (கலைஞர் அரங்கம்) நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், நொளம்பூர் வே.ராஜன், ஒன்றிய கழக செயலாளர்கள் அ.ம.துரைவீரமணி, கோவிலம்பாக்கம் வெங்கடேசன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் த.ஜெகதீசன், மாவட்ட கழக தகவல் தொழில்நுட்ப அணியின் மாவட்ட துணை, தொகுதி, பகுதி மற்றும் வட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பங்கேற்றனர்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் – 2026

வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களின் கைபேசி ஒப்படைக்கும் வசதி!

தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி தகவல்!

சென்னை, மார்ச் 25-

வாக்காளர்களின் வசதியை உறுதி செய்யவும், மேம்பட்ட வாக்குப்பதிவு அனுபவத்தை வழங்கவும் இந்திய தேர்தல் ஆணையம் பல முன்முயற்சிகளை எடுத்துள்ளது.

வாக்காளர் தகவல் சீட்டை (Voter Information Slip) மேலும் எளிதாக்கும் வகையில், அதில் வாக்காளரின் வரிசை எண் மற்றும் பாகம் எண் ஆகியவை தெளிவாகத் தெரியும் வண்ணம் தேர்தல் ஆணையம் மாற்றியமைத்துள்ளது. இதன் மூலம் வாக்காளர்கள் தங்களது வாக்குச்சாவடியைக் கண்டறிவதும், இதர விவரங்களைத் தெரிந்து கொள்வதும் எளிதாகும்.

வாக்குப்பதிவு நாளன்று வாக்காளர்களின் வசதிக்காக, வாக்குச்சாவடிகளில் கைபேசிகளை (Mobile Phones) ஒப்படைக்கும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வாக்குச்சாவடியின் நுழைவாயில் அருகே மிகவும் எளிமையான 'புறா கூண்டு போன்ற ' (Pigeon hole) பெட்டி அல்லது சணல் பைகள் அமைக்கப்படும்; அங்கு வாக்காளர்கள் தங்களது கைபேசிகளை பாதுகாப்பாக வைத்துச் செல்லலாம்.

இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற 'ECINET' என்ற ஒருங்கிணைந்த ஒற்றை இணையதளத்தைத் செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது. இதில் ஆணையத்தின் 40க்கும் மேற்பட்ட செயலிகள் மற்றும் இணையதளங்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வாக்காளர்கள் பின்வரும் சேவைகளைப் பெறலாம்,

வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்தல், வாக்காளர் அடையாள அட்டையில் (EPIC) திருத்தங்கள் மேற்கொள்வது, வாக்குப்பதிவு சதவீத விவரங்களைப் பார்த்தல், வாக்குச்சாவடி விவரங்களை அறிதல் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான உதவிகளைப் பெறுதல், தேர்தல் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுதல் போன்றவைகள் ஆகும். ECINET செயலியை கூகுள் பிளேஸ்டோர் (Google Play Store) அல்லது ஆப்பிள் ஆப் ஸ்டோர் (Apple App Store) மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பணம், மதுபானம், போதைப்பொருள் மற்றும் இதர தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கண்காணித்துத் தடுக்க மாநிலம் முழுவதும் கண்காணிப்பு மற்றும் அமலாக்கக் குழுக்கள் 24 மணி நேரமும் பணியாற்றி வருகின்றன. 23 மார்ச் 2026 வரை பறிமுதல் செய்யப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

ரொக்கம் ரூ.230.53 கோடி, மதுபானம் ரூ.20.72 கோடி, போதைப் பொருட்கள் ரூ.26.47 கோடி, விலை மதிப்பயற்ற உலோகங்கள் (தங்கம்/வெள்ளி) ரூ.292.02 கோடி, இதர பொருட்கள்/இலவசங்கள் ரூ.22.19. மொத்தம் ரூ.151.93 கோடிபறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்குமான தொடர்பு!

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு இல்லம் அமைத்து தமிழர்களை பாதுகாத்து வருகிறார் முதல்வர்!

இந்திய நாடாளுமன்ற நிலைக் குழுக் கூட்டத்தில் க,கல்யாண சுந்தரம் எம்,பி, பேச்சு!

புதுடெல்லி மார்ச்.25-

புதுடெல்லியில் நடைபெற்ற இந்திய பாராளுமன்ற நிலைக்குழு கூட்டத்தில் தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் உள்ள உறவையும், இலங்கை மக்களை தமிழ்நாட்டில் அகதிகளாய் பார்க்காமல் தமிழ்நாடு மக்களாகவே எங்கள் முதல்வர் அவர்கள் பேணி பாதுகாக்கிறார் என்று மாநிலங்களவை உறுப்பினர் சு. கல்யாணசுந்தரம் சிறப்புரையாற்றினார்.

புதுடெல்லி பாராளுமன்ற வளாகத்தில் கலாச்சாரம், சுற்றுலா மற்றும் போக்குவரத்துத்துறை நிலைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை நாடாளுமன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டு இந்தியா மற்றும் இலங்கை காலாச்சாரம், சுற்றுலா மேம்பாடு மற்றும் போக்குவரத்து வசதிகள் பற்றிய தங்களுடைய கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

அப்போது மாநிலங்களவை உறுப்பினரும், கலாச்சாரம், சுற்றுலா மற்றும் போக்குவரத்துத்துறை நிலைக்குழு உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் தமிழகத்தின் வரலாற்று தொன்மைகளை எடுத்துரைத்து, இலங்கைக்கும், தமிழ்நாட்டிற்கும் உள்ள நெருங்கிய தொடர்பினை நினைவு கூர்ந்தும், தமிழக அரசால் தற்போது இலங்கை அகதிகளுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்களை நினைவுபடுத்தியும் உரையாற்றினார். இலங்கைக்கு அருகில் தமிழ்நாடு உள்ளதால் அதிகளவிளான இலங்கை அகதிகள் நீண்ட காலமாக தமிழ்நாட்டில் வசித்து வருகின்றனர். நீண்ட காலமாக தமிழ்நாட்டில் இருக்கும் இலங்கை அகதிகளை தமிழ்நாடு மக்களாகவே பாவித்து அவர்களை அகதிகளாக நடத்தாமல் தமிழ்நாட்டின் குடி மக்களாக கருதிய எங்கள் தமிழ்நாட்டு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் நீண்ட காலமாக அகதிகளாக இங்கு இருப்பவர்ளுக்கு வீடுகள் கட்டி கொடுத்தும், அவர்களுக்கு ஒட்டுரிமையும், ரேசன் பொருட்கள் வழங்கி அவர்களை காத்து வருவதாகவும் கூறினார். தமிழ்நாடும் - இலங்கையும் தொப்புள் கொடி உறவுகள் எனவே இலங்கையை சேர்ந்தவர்கள் தமிழ்நாடு வந்து ஆய்வு செய்து தமிழின் பெருமையை உலகின் அனைத்து பகுதிக்கும் எடுத்துரைக்க வேண்டும் என்றும் கல் தோன்றி, மண் தோன்றிய காலத்துக்கு முன் தோன்றிய மூத்த மொழி தமிழ். அத்தமிழைப் போல் இயல், இசை, நாடகம் பிறந்ததும், சோழர் குலத்தை தழைத்தோங்க செய்த ராசராச சோழன் பிறந்ததும் தஞ்சை மாவட்டம் என்றும் அவர் இராஜஇராஜ சோழன் இலங்கை சென்றதையும் நினைவு கூர்ந்து உரையாற்றினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலினின் சீரிய திட்டங்களால்

தமிழ்நாட்டு மக்கள் தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்க உறுதி பூண்டுள்ளனர்!

கரூர் மாவட்டக் கூட்டத்தில் செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேச்சு !

கரூர், மார்ச் 25-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திட்டங்களினால் எங்கள் வாக்கு உதயசூரியனுக்கே என உறுதி செய்து மக்கள் வரவேற்பு அளிக்கின்றனர் என செயல் வீரர்கள் கூட்டத்தில் கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி பேசினார்.

கரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கரூர் கிழக்கு ஒன்றியம், கரூர் வடக்கு ஒன்றியம், தாந்தோணி மேற்கு ஒன்றியம் செயல்வீரர்கள் வீராங்கனைகள் கூட்டங்கள் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்எல்ஏ சிறப்புரையாற்றினார். அவர் பேசியதாவது:

கரூர் சட்டமன்ற தொகுதிக்கு உடபட்ட 6 பகுதி கழகங்கள் மற்றும் 3 ஒன்றிய கழகங்களில் என 9 இடங்களில் செயல் வீரர்கள் வீராங்கனைகள் கூட்டம் நடைபெற்றிருக்கிறது. பகுதி செயலாளர்களுக்கும் ஒன்றிய செயலாளருக்கும் இடையே யார் அதிக வாக்குகளை பெறுவது என ஆரோக்கியமான போட்டி நிலவுகிறது. மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளை நாம் பெற்றாக வேண்டும். கடந்த ஐந்தாண்டு கால திராவிட மாடல் ஆட்சியில் கரூர் மாவட்டத்திற்கு ஐந்தாயிரம் கோடி ரூபாய் வளர்ச்சி திட்ட பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். அனைவரும் வியந்து போய் நிற்கிறார்கள். ஒட்டுமொத்த மக்களும் முழுமையாக நம்பிக்கை வைத்து மகத்தான வெற்றியை அளிக்க முடிவு செய்துவிட்டனர். செல்லும் இடங்கள் எல்லாம் எங்கள் வாக்கு உதயசூரியனுக்கே என உறுதி செய்து மக்கள் வரவேற்பு அளிக்கின்றனர்.

நெரூர் பகுதி ஒரு தீவு போன்ற நிலையை மாற்றியது இந்த ஆட்சியில் தான். ரூ. 101 கோடி மதிப்பிலான உயர்மட்ட பாலம் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு பொதுமக்கள் பயன் அடைந்து வருகின்றனர். வாக்குச்சாவடி நிர்வாகிகள் ஒவ்வொருவரும் தலா 100 வாக்குகளை சேகரிக்க வேண்டும். நேரடியாக மக்களைச் சந்தித்து வாக்கு சேகரிக்க வேண்டும்.

இங்கே ஒவ்வொரு கூட்டங்களிலும் 5 ஆயிரம் முதல் 6000 பேர் வரை பங்கேற்று இருக்கின்றீர்கள். ஒவ்வொரு வீட்டிலும் மூன்று வாக்குகள் என்றால் கூட 15 ஆயிரம் வாக்குகள் உறுதி செய்யப்பட்டு மொத்த வாக்குகளில் 50 சதவீத வாக்குகள் நமது வாக்குகளாக இருக்கின்றன. மேலும் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சியினரோடு சென்று வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட வேண்டும். 70 சதவீதம் வாக்குகளை நாம் பெற முயற்சி எடுக்க வேண்டும்.

ஒன்றிய அரசு நமக்கு தர வேண்டிய திட்டங்களை தருவதில்லை. நிதிகளை தருவதில்லை. 100 நாள் வேலை திட்டம் உட்பட அனைத்து திட்டங்களையும் செயல்படுத்த விடாமல் தடுக்கின்றனர் . ஆனால் இதையெல்லாம் தட்டிக் கேட்க முடியாமல் அதிமுக அடிமையாக இருக்கிறது. அடிமையை அழைத்து வந்தாலும் சரி பாரதிய ஜனதாவின் கனவு ஒருபோதும் நிறைவேறாது. இந்த தேர்தல் மட்டுமல்ல எந்த தேர்தலிலும் அடிமை அதிமுகவால் வெற்றி பெற முடியாது. டெல்லி செல்வதை தான் இவர்களால் செய்ய முடியும். அதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள்.

கோவில்கள் தேவாலயங்கள் பள்ளிவாசல்கள் என திருப்பணி என்றால் அவர்களுக்கு நினைவில் வருவது கழக அலுவலகம் தான். அனைத்து பணிகளுக்கும் உதவி செய்திருக்கிறோம். ஆனால் எதிர் முகாமில் ஏதாவது செய்திருக்கிறார்களா என்று பார்த்தால் அவர்களுக்கு தேவையானதெல்லாம் பெட்ரோல் பங்க் தான். அதனால் எதைப் பற்றியும் கவலை இல்லை என்று இங்கே சொன்னார்கள். எனக்கு பெட்ரோல் பங்க் எல்லாம் வேண்டாம். அனைத்து மக்களின் மனங்களிலும் இடம் பெற வேண்டும் என்பதே முக்கியம் என்னை வெற்றி பெற வைக்கின்ற பொது மக்களுக்கு வாழ்நாள் முழுவதும் நன்றியுள்ளவனாக பணியாற்றுவேன்.

இங்கே ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகி உள்ளவர் கவர்னர் அனுமதி கொடுக்காததால் வழக்கு தொடர் முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அனுமதி கொடுத்திருந்தால் செய்த முறைகேடுகள் எல்லாம் வெளியே வந்திருக்கும். எதிர் முகாமில் மக்களுக்கு எந்த திட்டத்தையும் செய்யவில்லை. ஆட்சிக்கு வந்தால் செய்வோம் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த தேர்தலின் போது மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிர் உரிமைத்தொகை ரூ.1000 தருவோம் என்று கூறிய போது அதெல்லாம் தர முடியாது என்று கூறியவர் தான் எடப்பாடி. ஆனால் இன்று கதை காப்பி அடித்து ஆட்சிக்கு வந்தால் தருவோம் என்று மக்களை ஏமாற்ற பார்க்கிறார் அது நடக்காது.

கழக கூட்டணி தமிழ் நாட்டில் 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெறும். கரூர் மாவட்டத்தில் நான்கு தொகுதிகளிலும் உதயசூரியன் வெல்லும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இன்னும் தேவையான அனைத்து திட்டங்களையும் மக்களிடம் கொண்டு சேர்ப்போம் இவ்வாறு அவர் பேசினார்.

எம்எல்ஏக்கள் ஆர். இளங்கோ, க. சிவகாம சுந்தரி, கரூர் முரளி, வழக்கறிஞர் விஜயகுமார், எம்எஸ் கே.கருணாநிதி, பூவைர மேஷ்பாபு, ஒன்றிய கழக செயலாளர்கள் முத்துக்குமாரசாமி, வேலுச்சாமி, கோயம்பள்ளி பாஸ்கரன் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்ற தொகுதி, வார்டு 55 ல் உள்ள போர்ச்சுகீஸ் சர்ச் தெருவில் வசிக்கும் இஸ்லாமிய இளைஞர்கள் ஷகீல், ஜலால் பாய், ஜமீல், பிலால், உசைன், அம்ஜத், பெரோஸ், பைசல், கலீல், வாசிம் ,சந்து, ஜுபேர், சபீர், நிசார், நசீர், விஷ்வா, பிரகாஷ், அக்பர், நசீர், ஷானவாஸ், ஜலால், ஜாக்ரியா ஆகியோர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வின் போது வட்டக் கழகச் செயலாளர் எல் சத்யநாராயணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வேளச்சேரியில் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை!

தொகுதி தேர்தல் பொதுப் பார்வையாளர் மேற்கொண்டார்!

சென்னை, மார்ச் 25-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு, வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி, தேர்தல் பொதுப் பார்வையாளர் கன்ஷியாம் தோரி, தலைமையில், தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி எஸ். லட்சுமி பிரியா முன்னிலையில், காவல் துறை அலுவலர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதி களுடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று (23.03.2026) அடையாறு மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சென்னை மாவட்டத்திற்குட்பட்ட வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தேர்தல் நன்னடத்தை நெறிமுறைகள் பின்பற்றி பணிகள் மேற்கொள்வது தொடர்பாக அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், காவல்துறை மற்றும் அலுவலர்களுடன் உரையாடி உரிய ஆலோசனைகளை வழங்கினார்.

சூலூர் தொகுதி காடம்பாடி ஊராட்சியில் வரும் சட்டமன்றத் தேர்தலையொட்டி மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில்பாலாஜி அறிவுறுத்தல்படியும், கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் அனுமதியுடனும், கோவை தெற்கு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஞானசேகர் தலைமையில் சூலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மன்னவன் முன்னிலையில், சூலூர் தெற்கு ஒன்றிய ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் பெருமாள் வரவேற்புரையில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கி திண்ணைப் பிரச்சாரம் நடைபெற்றது. இப்பிரச்சாரத்தில் கழக மாநில ஆதி திராவிடர் நலக்குழு இணைச் செயலாளரும், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவருமான திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் கே.பி. சண்முகம் ராஜேந்திரன், தமிழ்ச்செல்வன், கிளை செயலாளர்கள் சன். நடராஜ், சண்முகம் மற்றும் ஊர் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.